[25th April 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, at this stage **I** cannot state categorically anything. I do not know whether the report has come. I think if the hon. Member renews his question after the report is received by the Government, we will look into it.

* SRI K. B. S. MANI : சென்னையிலிருக்கிற கொசுக்களுக்கு ஏதாவது விசேஷ பவர் இருக்கிறதா ? அதனால் எந்தெந்த வியாதிகள் வருமென்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கு ஜனத்தொகை அதிகம். ஆகவே கொசுக்களுக்கெல்லாம் ஒவர் பீடிங் அதிகமாக இருக்கும்.

Levy of Income-tax on Co-operatives

* 802 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not representing to the Central Government to drop the proposed levy of income-tax on co-operatives ?

THE HON. SRI R. VENKATARAMAN : The assumption contained in the question is not correct.

SRI N. K. PALANISAMI : கூட்டுறவு சங்கங்களுக்கு இன்கம் டாக்ஸ் போடுவதால் கூட்டுறவு முறையே பாதிக்கப்படுமாகையால் சர்க்கார் இதைப் போடக் கூடாதென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தினார்களா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: அந்த மாதிரி எழுதி அனுப்பியிருக்கிறது.

MR. SPEAKER: Questions Nos. 803 and 805 are postponed as the Hon. Minister is not in the city and Question No. 804 is postponed **as** the Hon. Minister wants postponement of the question to a later date.

Supply of electricity to villages

* 806 *Q.*—SRI T. K. SUBBIAH : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தென் சென்னை எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன்காரர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் எத்தனை கிராமங்களில் மின்சாரம் விஸ்தரித்தார்கள் ?

(ஆ) உடையார்பாளையம் தாலுக்காவில் எந்தெந்தக் கிராமங்கள் ?

(இ) அவர்கள் திட்டமிட்ட கிராமங்கள் எத்தனை ?

(ஈ) திட்டமிட்டப்படி நிறைவேற்றாத காரணம் என்ன ?

(உ) இனிமேலாவது நிறைவேற்றப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 258 villages.

(*b*) Ariyalur.
Kilapalur.
Kokkudi.
Keelaiyur.

(*c*) The particulars of the programme for the past years **are not available.**

25th April 1960]

(*d*) & (*e*) Our information is that the South Madras Electric Supply Corporation, Limited, has chalked out a programme to electrify 115 villages in the six taluks in Tiruchirappalli district during the next three years.

SRI T. K. SUBBIAH : உடையார்பாளையம் தாலுகா மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்தும் குறிப்பாக இரண்டு பஞ்சாயத்தில் தான் இந்த விஸ்தரிப்பு நடந்திருக்கிறது பத்து ஆண்டுகளில். அதிக கிராமங்களுக்கு அது விஸ்தரிக்கப்படாமல் இருப்பதை சர்க்கார் வற்புறுத்தி விரைவில் பல கிராமங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI V. RAMAIAH : உடையார்பாளையம் தாலுகாவில், நான் கொடுத்திருக்கிற விவரப்படி 4 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். அந்த தாலுக்கா மிகவும் பிற்போக்கான தாலுக்கா. அதற்கு ஒரு விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்பது என் ஆசை. அந்த தாலுகாவில் லைசென்சுதாரிடமிருந்து அவர்கள் கையிலிருந்து அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாமா என்ற பரிசீலனை இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் கைக்கு வந்தால் இன்னும் துரிதமாக இன்னும் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்துவிடலாம். குறிப்பாக அந்தத் தாலுக்கா தலைநகரத்திற்கே இன்னும் மின்சாரம் இல்லை. அது கண்டு உண்மையிலேயே எனக்கு மனக்கஷ்டந்தான் ஏற்படுகிறது. அந்தக் குறை நீண்ட காலத்திற்கு இருக்கக் கூடாதென்று என் அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். கூடிய விரைவில் மின்சாரம் அத்தாலுக்கா தலைநகரத்திற்கு வந்துவிடும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI K. R. VISWANATHAN : மின்சாரக் கம்பெனியிடமிருந்து மின்சாரம் பரவாத எல்லைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சி நடந்துகொண்டிருப்பதாக அறிகிறேன். அதற்காக சட்ட அபிப்பிராயம் கேட்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. அதன் முடிவு என்ன ? அப்படிப் பரவாத இடங்களில் இந்த ஆண்டு எந்தெந்த இடங்களில் சர்க்கார் சார்பில் மின்சாரம் கொடுப்பதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : பொதுவாக லைசென்சுதார் எங்கெங்கு விஸ்தரிப்பு செய்வதற்கு கஷ்டமிருக்கிறதோ அந்தப் பகுதிகளை அரசாங்கத்தினரிடம் கொடுத்துவிட்டால், நிபந்தனை இல்லாமல் கொடுத்துவிட்டால், அந்தப் பகுதிகளுக்கு அரசாங்கம் விஸ்தரிப்பு செய்வதில் கஷ்டம் இராது. ஆனால் சில இடங்களில் லைசென்சுதார் கொடுக்க மறுத்தாலும் கூட அங்குள்ள மக்களைக் குறிப்பாக விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு மிகவும் இடையூறாக இருப்பதால் அந்தப் பகுதிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாமா என்று சட்டப் பிரச்னையிலிருந்து ஒரு முடிவிற்கு அரசாங்கம் வந்திருக்கிறது. விரைவில் அந்த முடிவு விவசாயிகளுக்கு நன்மை தரும் முறையில் அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்று நம்புகிறேன்.

SRI S. THANGAVELU : மின்சார வெட்டு வருவதற்கு முன்னால் பணம் கட்டிய விவசாயிகளுக்கு பம்ப் செட்களுக்கு மின்சார சப்ளை கொடுக்க வேண்டுமென்று உத்திரவு இட்டிருந்தும் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

MR. SPEAKER : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மந்திரிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் பதில் சொல்லலாம்.

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி இதற்கு வேண்டுமென்றிருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் முதன்முதலாகப் போட்டிருக்கக்கூடிய காரணத்தினால் என்னால் முடிந்த வரையில் பதில் சொல்லுகிறேன். மின்சார வெட்டு இருப்பதாகவும், அதனால் மின்சார

[25th April 1960

சப்ளை கொடுக்கவில்லை என்றும், ஒரு தப்பான எண்ணம் அங்கத்தினர் அவர்களுக்கு இருக்கிறது. சபைக்கு நன்கு தெரியும், வெட்டு இப்பொது கிடையாது என்பது. அப்படி இல்லை என்று நான் பல கேள்விகளுக்கு இந்தச் சபையில் பல தடவை பல கேள்விகளுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் சொன்ன இந்தக் கஷ்டத்தைப் பற்றி எனக்குத் தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்து அவர்களது கஷ்டத்தை நீக்க எல்லா முயற்சிகளும் செய்கிறேன்.

Sri P. G. MANICKAM : தாலுகா ஆபீஸ்களில் மின்சார விளக்குகள் இல்லாதது பற்றி சர்க்கார் கவனித்து அதில் வேண்டிய கவனம் செலுத்தப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அனேகமாக எல்லாத் தாலுகாக்களிலும் இந்த மாதிரி நிலை இருப்பதால் இதற்கு என்று ஒரு ஸ்பெஷல் உத்திரவு போட்டு இதை உடனடியாகக் கவனிப்பதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக முயற்சி எடுப்பார்களா ?

The Hon. Sri V. RAMAIAH : நான் சொன்ன பதிலை அங்கத்தினர் அவர்கள் அவர்களுக்குத் தகுந்த முறையில் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த மாகாணத்தில் ஒரே ஒரு தாலுகா தலைநகரத்தில் மட்டும்தான் மின்சாரம் இல்லை. அவர்களது கோரிக்கை தாலுகா ஆபீஸ்களுக்கு மின்சார விளக்குகள் போடவேண்டும் என்பது. அதற்கு எனது சகாக்கள் ரெவின்யூ அமைச்சர் அவர்களும் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் போதுமான பணம் கொடுத்தால் எனது இலாகா உடனடியாக மின்சாரம் போட்டுக் கொடுத்துவிடும்.

Sri S. RAMALINGA PADAYACHI : உடையார்பாளையம் தாலுகா மட்டுமல்ல, பெரம்பலூர் தாலுகா தலைநகரத்திற்கு மட்டும்தான் மின்சாரம் இருக்கிறது. மற்றவிடங்களுக்கு இல்லை. அங்கு இறைக்கும் கேணிகள் அதிகமிருக்கிறது. ஆகவே, மின்சாரம் அங்கு கொடுப்பது பற்றி சவுத் இந்தியா கார்ப்பரேஷனிடமிருந்து அரசாங்கம் எடுத்து மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri V. RAMAIAH : பெரம்பலூர் தாலுகாவும் மிகவும் பிற்பட்ட தாலுகாதான். அங்கு வினியோகம் லைசென்சுதார்களிடம் இருப்பதால் அங்கத்தினர் விரும்புமளவு அந்த வேகத்தில் மின்சாரத்தை அங்கு பரப்ப முடியவில்லை. இருந்தாலும் அங்குள்ள லைசென்சுதார் ஒத்துழைப்புக் கொடுப்பதால், அவர்களுக்கு அரசாங்கம் போதுமான அளவு ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுத்து எங்கெங்கு விஸ்தரிப்புத் தேவையோ அதை விரைவில் செய்ய வேண்டுமென்பது என் ஆசை. இந்தச் சபையில் 25 லட்ச ரூபாய் கடன், இது போன்ற லைசென்சுதார்களுக்கு கொடுக்க முன் வந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். அதைப் பயன்படுத்தி அதிகப்படியான கிராமங்களுக்கு விஸ்தரிப்பு செய்யப்படும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Even if the schemes are sanctioned, in certain areas it takes some months ordinarily and even a year to put the work into execution. Is it because of the fact that lot of red-tapism is there and if so will the Government consider the desirability of putting an end to the red-tapism and see that the works are started immediately after the schemes are sanctioned ?

The Hon. Sri V. RAMAIAH: The hon. the Leader of the Opposition well knows that it is not purely red-tapism that stands in the way. If it is only red-tapism, I won't untie it but cut it out. In preparing the schemes and sanctioning them, we do them without any hitch. But unfortunately when the real execution comes in, materials are required. I cannot just take electrical energy and dip it in the village. Electrical energy will have to be taken through conductors, through poles, etc., and so many other materials are required and many of them will have to be imported into this country.

25th April 1960]

Sri J. MATHA GOWDER : ஸார், மின்சார வெட்டு இப்போது எங்குமே கிடையாது என்று அமைச்சர் அவர்கள் ஊர்ஜிதமாக தெரிவித்தார்கள். ஆனால், இந்த மாதம் 21-ம் தேதி நீலகிரியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக உத்தரவு போடப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தந்தி வந்தது. அதை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அப்படியானால் இம் மாதிரியான மின்சார வெட்டு ஏற்படுவதற்குக் காரணம் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள்தானா ? அப்படியென்றால் சர்க்கார் இதில் என்ன செய்யப்போகிறார்கள் ? 9 a.m.

The Hon. Sri V. RAMAIAH : மின்சார வெட்டு இப்போது இல்லை என்பதை இப்போதும் நான் மீண்டும் ஊர்ஜிதமாகச் சொல்கிறேன், ஏதோ மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தந்தி வந்திருக்கலாம். சில இடங்களில் மின்சார வினியோகத்தில் இருக்கின்ற கஷ்டங்களைப் பற்றி நான் இதற்கு முன்னால் சொல்லியிருக்கிறேன். அதாவது சில இடங்களில் இரண்டு விதமான உத்தரவு மாறி மாறிப் போனதின் காரணமாக சில இடங்களில் சிக்கல்கள் ஏற்பட்டன. குறிப்பாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் வரக்கூடிய நீலகிரி தொகுதியில் பச்சைத் தேயிலைக்கு எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக தனியாக வேண்டிய உத்தரவுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன.

Sri K. S. ARDHANAREESWARA GOUNDER : ஸார், கம்பெனிகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கக் கூடிய நேரத்தில் மேற்கொண்டும் கம்பெனிகளுக்குக் கடன் கொடுத்துக்கொண்டு போவதை விட கம்பெனியார் விஸ்தரிக்க வேண்டிய இடங்களில் எல்லாம் சர்க்காரே விஸ்தரிக்கும் ஏற்பாட்டை ஏன் செய்யக் கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன்?

The Hon. Sri V. RAMAIAH : இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும் பதில் சொல்லுகிறேன். இப்போது எங்கெல்லாம் மின்சார போர்டின் கையில் இருக்கிறதோ, அந்த இடங்களில் எல்லாம் மின்சார விஸ்தரிப்பு நடந்துகொண்டிருக்கிறது. அதே சமயத்தில் இப்போது கம்பெனியார் அல்லது லைசென்ஸார் கையில் இருக்கும் இடங்களில் விஸ்தரிப்புச் செய்யப்படாமல் இருக்கிறது. இதைப் பார்க்கின்ற மக்களுக்கு மன வருத்தம் ஏற்படுகிறது. ஆகவே, லைசென்ஸார் இடங்களை அரசாங்கம் எடுப்பதற்கு முன்னால், அரசாங்கம் ஏதேனும் செய்ய முடியுமா அதாவது இடைக்கால நிவாரணம் என்கின்ற முறையில் ஏதாவது வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற முறையில் மின்சார விஸ்தரிப்புக்காக 25 லட்சம் ரூபாய் லைசென்ஸார்களுக்குக் கொடுத்திருக்கிறோம். பின்னால் சர்க்கார் இதை எடுத்துக்கொள்ளும்போது இதனால் எந்த விதமான நஷ்டமோ, பாதகமோ ஏற்படாது என்பதுதான் என்னுடைய கருத்து.

Sri K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, 1960-61-ல் உடையார்பாளையம் தாலுகாவில் ஆண்டி மடம் என்கிற பகுதியில் சர்க்கார் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. இவ்விதம் இந்த இடத்தில் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அங்குள்ள கம்பெனியார் அனுமதி கொடுத்துவிட்டார்களா, அப்படியென்றால் அதே முறையில் ஜெயங்கொண்டான் தாலுகா தலைநகருக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு, மற்ற இரு அமைச்சர்களின் உதவியோடு இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri V. RAMAIAH : ஜெயங்கொண்டபுரம் தாலுகா தலைநகரத்திற்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு மற்ற அமைச்சர்களின் உதவி தேவையில்லை. தாலுகா தலைநகரிலுள்ள காரியாலயங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்குத்தான் மற்ற அமைச்சர்களின் உதவி தேவை என்று சொன்னேன். தாலுகா தலைநகருக்கு விஸ்தரிப்பதற்கு

என்னுலேயே நடவடிக்கை எடுக்க முடியும். அதிலும் குறிப் பாக இந்த வருடத்திற்குள்ளாக எல்லா தாலுகா தலைநகரங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு அதன்படி வேலை செய்து முன்னேறியும் இருக்கிறேம். அதில் கடைசியாக இருப்பதுதான் உடை யார்பாளையம் தாலுகா. இதில் உடையார்பாளையம் பகுதி பூராவையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாமா என்கின்ற பிரச்னை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இதன் பேரில் ஒரு முடிவும் செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போடுவதாக இருந்தால் மேல் உள்ள விவரங்கள் எல்லாம் சொல்லுகிறேன்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : ஸார், சாதாரணமாக மின்சாரம் செல்லும் வழியில் இருக்கின்ற அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறேம். குறிப்பாகச் சில இடங்களில், பஞ்சாயத்து போர்டு இருக்கக் கூடிய இடங்களில் அங்கு இருக்கக் கூடிய ஜாதி இந்துக்கள் வசதிக்குத் தக்க மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் பக்கத்தில் இருக்கக் கூடிய அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கிடைப்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட அரிஜன காலனிகளை எல்லாம் கணக்கெடுத்து, அவைகளுக்கு எல்லாம் மின்சார வசதி கிடைப்பதற்கு ஏதாவது அரசாங்கம் நல்ல முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன் ?

The Hon. Sri V. RAMAIAH : இந்தப் பிரச்னையைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பிரச்னையைக்கூடிய மட்டும் உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்ட உடனேயே அரிஜன இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் எந்தக் கிராமங்களுக்கு எல் லாம் மின்சார வசதி விஸ்தரிப்பு நடைபெற்றிருக்கிறதோ, அந்தக் கிரா மத்தின் சுற்றுப்புறத்திலுள்ள அரிஜன காலனிகளுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால் அவைகளுக்கு எல்லாம் மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதாக அரிஜன நல மானியத்திலிருந்து கொஞ்சம் உதவிகொடுத் தால், அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்துவிடலாம் என்று தீர்மானம் செய்தோம். இதற்காக அரிஜன மானியத்திலிருந்து 14 அல்லது 15 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று நிபுணர்கள் தெரி வித்தார்கள். இதை உடனடியாகத் தந்திருந்தால் இப்போது இந்தப் பிரச்னை வந்திருக்காது. ஆனுல், அரிஜன நல இலாகாவினர் கொஞ்சம் தீவிர கண்ணேட்டத்துடன் பார்க்காமல், இதைப் படிப்படியாகக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தந்து ஐந்து வருடத்திற்குள் முடிக்கலாம் என்று சொன் ஞர்கள். அதன்படி இப்போது எல்லா வேலைகளும் செய்யப்பட்டு வரு கின்றன. அதோடு எந்த இடத்திற்கு மின்சாரம் கொண்டுபோவதாக இருந்தாலும், சரி, பக்கத்தில் அரிஜனங்களின் காலனிகள் இருந்தால், அந்த ஸ்கீமில் அரிஜன காலனியையும் சேர்த்துக் கணக்கெடுத்தால்தான் விஸ்தரிப்பு நடக்கும், இல்லாவிட்டால் ஸ்கீம்கள் இருக்காது என்ற முறை யில் கூட இருந்து வருகிறது. அதல்லாமல் அரிஜன காலனிகள் உட் படுத்தாமல் ஸ்கீம்கள் இருக்க வேண்டும் என்றுல் அதற்கு கலெக்டர் அவர்களிடத்தில் கேட்டு, ஸ்கீம் தாமதம்ஆகக் கூடாத நிலையில் அனுமதி கொடுத்து வருகிறேம். ஆனுல் எங்கெல்லாம் அரிஜன காலனிகளுக்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் வேகமாக மின்சார வசதி கொடுத்து வருகிறேம்.

Sales tax on bread and biscuits

* 807 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to remove the disparity in the rates of sales tax levied for bread and biscuits ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.